உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திவிளக்கம்.

ஸ்ரீவிநாயகர் வணக்கம்.

முத்திப் பொருளுணர்ந்து முத்திபெ[illegible]
சித்துருவ வத்திமுகன் சீரடியைப்—பத்தி[illegible]
சிந்திப்பாய் நெஞ்சே தினம்வாழ்த்து நன்றாவே
வந்திப்பாய் மெய்யே மகிழ்ந்து.

சுப்பிரமணியர் வணக்கம்.

சுத்தமுறு நால்வேதஞ் சொல்லுபர மாத்துவித
முத்தியினைச் சேர்த்துய்ய மூதுலகி—னித்தமுமே
போத முருகன்றன் பொன்னடியைச் சிந்தித்தே
யோதிப் பணிவா முவந்து.

சிவ வணக்கம்.

ஆதியந்த மில்லா தறிவுருவா யுட்புறமுஞ்
சோதி மயமாகத் துன்னுகின்ற—போதசிவன்
தன்னை யனுதினமுஞ் சார்ந்தின் புறவணங்கி
யுன்னித் துதிப்பா முவந்து.

முத்தி விளக்கம்.

சற்குரு வணக்கம்.

சித்தமுறு மான்மாவைச் சிற்சிவத்தோ டைக்கியஞ்செய்
முத்தி விளக்க மொழிவதற்குத்—தத்துவத்தை
யோதி மலமறுத்த வொண்சாட்சி நாதனது
போதபத நெஞ்சமே போற்று.

நூலியற்றற் கேது கூறல்.

அத்தனரு ளிந்நூலை யாக்க வுணர்த்தலினுற்
சித்தத் தறிந்தபடி செப்புகின்றேன்—முத்திபெற்று
பந்தர் முதலாய் வருமூட் செல்லோருஞ்
சந்ததமு மின்படையத் தான்.

அவையடக்கம்.

பன்னரிய மேலோர் பகர்முத்தி நூலோடு
அன்னென் னறிவளவே சொன்னூலே—யுன்னுங்காற்
பாலனந்தா னீக்கும் பசிதன்னை யாவருக்கும்
ஏலுங்கூழ் நீக்கு மியல்பு.

நூலாரம்பம்.

வினா.

நன்றுதவுந் தேசிகனே ஞாலமதிற் சீவரெலாம்
என்றும் பிறந்திறப்ப தெத்தினாற்—குன்றாத
சுத்த சிவந்தன்னிற் றோய்ந்து பிறவாத
முத்தியுற லெத்தான் மொழி. (௧)

விடை

ஞானசொ ரூபம்விட்டு நண்ணுமஞ் ஞானத்தின்
ஈனமறைப் பிச்சைகளா லேபிறந்து—தானிறப்பர்.
தெய்வ கதியினாற் செய்தசிவ புண்ணியத்தால்
உய்விவே கம்மதனை யுற்று. (௨)

நித்தனித்த வத்தோர்த லீருலகத் திச்சைவிடல்
சித்த சமாதிசட்கஞ் சேர்தலொடு—முத்தியிச்சை
யென்னுநாற் சாதனங்க ளெய்தியத னாற்குருவின்
சன்னிதியி லன்போடு சார்ந்து. (௩)

சற்குருவுக் காத்தமங்கந் தானமொடு சற்பாவம்
நற்பணிகள் செய்தருளை நண்ணியே—யற்புதமாம்
ஞான விசாரமதா னண்ணுபர முத்தியினைத்
தானடைவ ரீதுணர்ந்து சார். (௪)

நிநிலா ஞானமெது செப்பதனைச் சேர்கவென்றூற்
பூதமொடு தேகம் பொறிகரண—மோதுமுயிர்
எல்லா முணர்கின்ற வின்னறிவே மாய்ந்துநியா
நல்லான்ம வத்துமிக நாடு. (ரு)

அறக்கொடிய வஞ்ஞானம் யாதென்று னீகேள்
மறைப்பு நினைப்புருவ மாகும்—பிறப்பிறப்பும்
இந்நால் வருமறைப்பு மெண்ணினைப்பு மாற்றினால்
முத்திநிலை யுண்டா முயல். (சா)

சோக வெறுப்பிச்சை தோன்றுதற்குக் காரணமென்
தேகமுதற் பொய்விடைய சிந்தனையா—லாகுமுணர்
அந்த நினைவொழிந்தா லானந்த மாமுத்தி
சிந்தையினி லுண்டாகுந் தேர். (எ)

சித்துருவைத் தான்மறந்த சிவருக்குத் தெய்வவருள்
எத்தால் வருமதனை யீங்குரைப்பா—யத்தனென்றுந்
தற்கா ருணியமதாற் சாற்று முயிரையெலாம்
நற்பதத்தைக் கூடவைப்ப னாடு. (அ)

மாய்பிறப்பின் றுன்பமதை மாற்றுமே யீசனருள்
எய்சிவன் றன்முபற்சி யெத்தினுக்கோ—தூய்மதியாய்
மூர்ச்சையுறுஞ் சிவனைப்போன் மூடவித்தை யுற்றவனைத்
தேர்ச்சியுறச் செய்யுமது தேர். (கூ)

பின்னந்தத் தேர்ச்சியினாற் பேசரிய வீசனடி
யுன்னினர்க்கு முத்தியுண்டா முன்னாமற்—பன்னாளும்
பொய்யுலகை மெய்யென்று புந்தி மயக்கமுற்றோர்
உய்யா ரெனுமறைக ளாற்று. (௰)

ஆகலினான் முத்திதனக் காமுயற்சி யெப்பொழுதும்
மேதினியிற் பக்குவற்கு வேண்டுவதே—யோதுகின்ற
அந்தவுரை நம்புசுக ராதியோர் முத்திபெற்றுப்
பந்த மகன்றதனைப் பார். (௰க)

முத்திக் குரிய முயற்சியெது சொல்லென்றாற்
சித்தமுதல் வாக்குடலின் செய்கைவிட்டுத்—தத்துவத்தில்
ஒன்றுவது தானேயிங் குத்தமமா நன்முயற்சி
நன்றுனக்குச் சொல்லினே னாடு. (௰உ)

ஓதுகின்ற முக்கரண முற்றதொழி னீங்கிலையேல்
வேதம் விதித்த விலக்கொழித்து—மேதினியில்
நல்லவினை செய்துய்வாய் நற்கருமங் கூடிலையேற்
பல்காலுஞ் சாதுசங்கம் பற்று. (௰ந)

சாது வெனுமொழிக்குத் தக்கோர்கள் யாரென்றால்
ஓதுந் துவந்துவங்க ளொத்துமிற்கு—மாதவரே
சாதுக்களாமவர்கள் சங்கமுறு நல்வினையாற்
கோதிலா முத்திவருங் கூடு. (௰ச)

சிதமழற் றுக்கசுகஞ் செப்புதுதி நிந்தையுடன்
ஓதுமவ மானமோ டொன்மான—மேதினியி
லாப மலாபமுட னண்ணுஞ் செயாசெயமுந்
தாபத் துவந்துவங்க டாம். (மரு)

ஏதுந் தெரியாத வென்றனக்கு நின்னருளாற்
போதிப்பா யெத்தனைசெய் புண்ணியங்க—டீதுவிட்டுப்
பூமிதனிற் செய்கின்ற புண்ணியங்க ளோரிரண்டாங்
காமியநிட் காமியமுங் காண். (மசா)

கத்தனுய் வாழ்சீவன் காயமனம் வாக்கினுல்
நித்தநை மித்தமுத னீள்கன்ம—மித்தனையிற்
காமியமாச் செய்வதெலாங் காண்சிவ புண்ணியநிட்
காமஞ் சிவதன்மங் காண். (மஎ)

கன்மபலத் திச்சையுறல் காமியநிட் காமியந்தான்
கன்மபலத் திச்சைவிடல் கண்டறிதி—கன்மபலம்
வேண்டல் பிறப்பிறப்பாம் வேண்டாது செய்கன்மம்
ஈண்டுமுத்தி தானளிக்கு மெண். (மஅ)

சாதனத்திற் சொன்ன சமாதியோ டாறினையுந்
தீதொழிக்குந் தேசிகர்க்குச் செய்பணியு—மீதிதென்று
நன்கு விளங்க நவிலுவா யென்றனக்குக்
குன்றாத நின்கருணை கொண்டு. (மகூ)

எண்ணுஞ் சமந்தமமு மேய்ந்த வுபரதியும்
நண்ணுந் திதிக்ஷையொடு நற்சிரத்தை—யொண்சமா
தானமோ டாறறிதி சாற்றுசம மூட்காணந்
தானடக்கல் பின்றமமோ தான். (உ௰)

இந்திரியந் தானடக்க லேய்ந்த வுபரதிதான்
நன்றுங் கருமம்விட னற்றிதிக்ஷை—வந்தசுக
துக்கஞ் சகித்திடுதல் சொல்சிரத்தை நூல்குருவை
எக்காலு நம்புவதென் றெண். (உக)

ஓதுஞ் சமாதான முற்றகுரு வாக்கியத்தை
ஆதரவாச் சிந்தித்த லாமறிதி—போதனைசெய்
சற்குருவுக் காத்தமது தானு மிதஞ்செய்தல்
சொற்பணிகள் செய்தலங்கஞ் சூழ். (உஉ)

சற்குருவின் வத்துவினைத் தான்காத்த முனம்பின்
சற்குருவே மெய்ச்சிவமாய்த் தானம்பல்—சற்பாவம்
ஆயுங்காற் சற்குருவி னாருட்குச் சாதனமாம்
ஏய்கின்ற நாற்பணியு மெண். (உங)

ஆசிரிய னல்லருளை யன்றிமுத்தி கூடாது
தேசிகன்ற னின்பத் திருவருளை—நேசமுடன்
பெற்றவரே பேசரிய பேரின்பந் தானடைவர்
நற்றவனே யீதுணர்ந்து நாடு. (உச)

முத்தி சொருபனே முத்திதருந் தேசிகனே
சித்தமலம் போக்குகின்ற சிற்பரனே—யித்தரையிற்
தோற்றி யருள்புரியுந் தூயவனே யென்னாளும்
போற்றிமிகப் போற்றிநின்றாட் போது. (௨௫)

துக்கந் தனையடைந்தேன் றுக்கமதை நீங்கறியேன்
துக்க மொழித்துச் சுகமருள்வா—யிக்கணமே
பந்தப் பொருளைவிட்டுப் பன்னரிய முத்தியினைச்
சொந்தமெனச் சேர்வாய் சுகம். (௨௬)

பந்தப் பொருளோடு பந்த வனுபவமும்
பந்த மெனும்பதமும் பன்னியே—சிந்தையுறுந்
துன்ப மெலாமாற்றித் தூயபதம் போற்றுகின்ற
அன்புடையேற் கின்ப மருள். (௨௭)

பந்தப் பொருளுணர்வாய் பன்னுகின்ற தேகசகம்
பந்தவனு போகம் பகர்துக்கம்—பந்தமெனல்
கட்டாகுந் தேகசக காரியத்தை யானெனதாச்
சுட்டா தொழிவாய் சுகம். (௨௮)

சுட்டறிவை நீக்கினாற் றொல்லுலகி லெந்நாளும்
இட்டமெலாங் காண்பதெவ்வா றென்குருவே—விட்டதனை
நீங்கா திருப்பதனா னோர்குற்ற மேதொழிந்து
பாங்குபெற நன்றாப் பகர். (௨௯)

சுட்டா லியானென துஞ் சுட்டான் மறப்பறிவுஞ்
சுட்டாற் செயலொழிவுந் துன்னும்பின்—சுட்டறிவு
நாம வுருவினையே நண்ணுமதாற் றுன்பமொழித்
தேமமுறுஞ் சிற்சிவத்தை யெண். (௩0)

முத்திப் பொருளோடு முத்தி யனுபவமும்
முத்தி யெனும்பதமு மோதருளாற்—சித்தநிலை
பெற்றுப் பிறவாமை பெற்றடியே னின்பமுற
உற்றகுரு நாதா வுரை. (௩க)

முத்திப் பொருளறிவாய் மூதறிஞர் போற்றுசிவம்
முத்தியனு போக மொழிசுகமே—முத்தியென்ப
தெல்லாம் விடுதலுக லின்பசிவந் தன்னோடு
நல்லயிக்க மாகுவது நாடு. (௩உ)

ஓதுஞ் சிவத்தி னுருவுணர்ந்து கூடுதற்குப்
போதிக்க வேண்டுகின் பொன்னருளான்—மாதவர்கள்
சிந்தைகுடி கொண்டிருக்குந் தேசிகனே நின்னடியை
வந்தித்தேற் குள்ள மகிழ்ந்து. (௩௩)

சுத்த சிவமுணரச் சொல்லுமுரு நாமமிலை
யத்தை யடையவுனே யன்றியிலை—யித்தையுன்னு
அன்புநெஞ்சோ டண்டத்து மாரறிவே யோதுசிவம்
இன்புருவங் கண்டடைதி யிங்கு. (௩௪)

இன்ப வுருவாகு மென்பதெது போலவெனில்
இன்ப முவமித் தியம்பவொணா—தின்பருவைச்
செப்பினர்க ளெங்குமிலைத் தேருங்கா லவ்வின்பம்
எப்படியுண் டப்படியா மென். (௩௫)

நாமஞ் சிவமென்று நண்ணுவது பின்னது
நேயங்காய் மங்களத்தா னேர்ந்ததுபின்—மாமறைகள்
சொல்லு மனமிறந்த சோதிக் கிடுநாமம்
நல்லசிவ மோடனந்த நாடு. (௩௬)

கூடுதற்கு வேறிலதாற் கூடுவதங் கெப்படியாம்
நாடதுவே நானென்று நண்ணுவதே—கூடுவதாம்
பின்னதுநா னல்லவென்று பேணல் பிறப்பிறப்பாம்
உன்மறதி தானொழிந்தே யுன். (௩௭)

ஒன்றே சிவம்பலவோ வுண்மை நிலையினொடு
நன்று மிலக்கணமு நாயேற்குக்—குன்றாச்
சுருதி யுரைத்தபடி தூய்மொழியி னாலே
குருபரா வையமறக் கூறு. (௩௮)

அத்துவித மொன்றே யகண்டசச்சி தானந்த
நித்தபரி பூரணமாய் நிற்பதுவே—சுத்தசிவ
நன்று மிலக்கணநீ நாடி யதுதனிலே
நின்றிடுதன் முத்தி நிலை. (௩௯)

தொல்லைமறைக் கெட்டாத தூய்சிவத்தின் சத்தியது
மில்லாதோ வேறாய் நினைதருளாற்—சொல்லென்றால்
நீருங் குளிர்ச்சியும்போ னீங்காச் சிவஞ்சத்தி
ஓருமிடத் தொன்றேகண் டுன். (௪௰)

ஆயுங்காற் சுத்தசிவ மத்துவித மென்பதெதனால்
தோயுஞ் சுகதஞ் சுசாதியொடு—தீயதெனப்
பேசும் விசாதியாம் பேதங்க ளில்லதனால்
மாசிலா வத்துவித மாம். (௪௧)

பேசுஞ் சுகதமுதற் பேதவகை யெப்படிச்சொல்
மாசின் மரத்தின் மலராதி—யேசுகதம்
வேறுமரந் தன்சாதி மேவுகின்ற கல்லாதி
கூறும் விசாதியெனக் கொள். (௪௨)

பேதவகை யெப்படித்தான் பேசுசிவத் தில்லையென்றால்
சோதி நிரவயவந் துன்னுசிவ—மாதலினால்
ஓதுஞ் சுகதமிலை யுன்னுசிவம் வேறிலதால்
ஏதமறுந் தன்சாதி யின்று. (௪௩)

மன்னுலக காரணமாம் மாமாயை யுள்ளதனால்
இன்மை விசாதிகத்துக் கெப்படியாம்—பன்னுகின்ற
சித்திரிகன் சத்தியைப்போற் சின்மாத் திரப்பிரம
வத்துவன்றிக் காணோ மதி. (௪௪)

ஆதலினு னற்சிவத்துக் காகும் விசாதியிலே
பேததுவி தம்விட்டுப் பேணிடுவா—யோதுமொன்றே
என்ற பதப்பொருண்மற் றெல்லா மயிக்கமதால்
ஒன்றே சிவங்கண் டுணர். (சரு)

என்றுசிவந் தானகண்ட மென்பதேத னுலென்றால்
நன்றாகின்ற கன்மனமு நான்மறையு—முண்ணாடிக்
கண்டுணரும் வத்துவைப்போற் கண்டப் படாவதனுல்
விண்ட தகண்டசிவ மென்று. (சகா)

அத்தமனை யன்பர்க் கருள்புரியுஞ் சற்குருவே
சுத்தசிவ லக்கணமாய்ச் சொல்லுகின்ற—சத்துசித்தோ
டானந்த நித்தியமே லாம்பூ ரணமைந்தும்
யானறிதற் கெவ்வா றறை. (சஎ)

சத்தென்று முள்ளதினுற் றானே முழுதுணர்வாற்
சித்துசிவ மானந்தந் தேரின்பா—னித்தியமே
பன்னு மனித்தமிலாப் பண்பினுற் பூரணமே
மன்னு நிறைவான் மதி. (சஅ)

தங்குசிவம் பூரணமாய்ச் சச்சிதா னந்தமெனில்
எங்குந் தெரியா திருப்பதென்னே—பங்கமின்றி
நானென்ப தேசத்தாம் ஞானமது சித்தாகும்
ஆனந்த மெப்படிச்சொல் லாங்கு. (சகூ)

பன்னுசுவை கந்தமுருப் பாலிடக்கொன் றயிருந்துந்
துன்னுமொரோ ரிந்தியத்துத் தோற்றுபொய்வொன்—றன்ன
நாடொன்றுஞ் சச்சிதா னந்தமுறு மின்விருத்தி [துபோல்
கூடுகின்ற பேதத்தாற் கொள். (௫௰)

தாமதமும் ராசதமுஞ் சாத்திகமு முக்குணங்கள்
ஆமவையான் மூடகோ ரஞ்சாந்த—மாம்விருத்தி
மூன்றதனாற் பேதமுற்று முன்னுசச்சி தானந்தந்
தோன்றும் பிரிவாகச் சூழ். (௫௧)

சார்விருத்தி மூடத்தாற் சத்தொன்றுங் கன்முதலில்
நேர்புத்தி கோரமதிற் சிற்சந்தாம்—நேர்புத்தி
சாந்த விருத்தியினிற் சச்சிதா னந்தமுறுஞ்
சாந்தசிவத் தின்பமுநீ சார். (௫௨)

சத்தாதி லக்கணங்கள் சாரு முபாதியுண்டு
புத்தியினுற் கண்ட கல்வாய் போதியென் றற்—சத்மூன்றும்
புல்லுவிவ காரிகமும் பொய்ப்பிராதி பாதிகமும்
நல்லபர மாத்திகமு நாடு. (௫௩)

சொல்லுணர்வி னித்திரையிற் றோன்றுமற் சாக்கிரத்தில்
நல்லமுத்தி சேர்வளவு நண்ணுவது—சொல்லுகட
மாதிமுதற் சத்தாகு மாய்கனவிற் கண்டழிவ
தோது மிடைச்சத்தா மென்றுன். (௫௪)

பன்னிறுதி யான பரமார்த்த சத்தழியா
துன்னுங் கடாதி யுபாதியொழி—மன்னுகின்ற
சத்தொன்றே யாகுஞ் சலனமற்று நிற்கின்ற
சித்தத்தாற் கண்டு தெளி. (௫௫)

சித்தொன் றுபாதியினாற் சிவபரன் கூடஸ்தன்
ஒத்த பிரமமோ டோர்நான்கா—மித்தையாய்
மன்னவித்தை மாயை மருவுடல மோடெவையும்
உன்னு முபாதிவிடுத் துன். (௫௪)

ஓர்வானே நாலதிலே யுற்றகட னீர்வானுங்
கார்மேக நீர்வானுங் காண்பொய்யே—தேர்மெய்தான்
சொல்லுங் கடவானுந் தூயமகா வானுந்தான்
நல்லசித்திற் றிட்டாந்த நாடு. (௫௭)

கோதிலோ ரானந்தங் கூறெட் டுபாதியினால்
மாதுமுத லாய்விடைய மன்னிவர—லோதுவிடை
யானந்த மாஞ்சுழுத்தி யாகும்போ துண்டாதல்
ஞானபிர மானந்த நாடு. (௫௮)

நித்திரையின் பின்னுதித்த னீள்வா சனானந்தம்
ஒத்தவுதா சீனமதி யுட்டோன்ற—லத்தனையுந்
தக்கநிசா னந்தமனந் தான்லயஞ்சேர்—யோகுதித்தல்
முக்கியமா மானந்த முன். (௫௯)

ஆசைவிடை யத்துள்ளே யான்பிரிய னென்பதனில்
மாசின்றித் தோன்றலா னானந்தம்—பேசுங்கால்
மெய்யான்மாப் பொய்யுலகை மென்னும் விவே கத்துதித்த
வையமக லத்விதானந் தம். (௬0)

துன்னுமகா வாக்கியத்திற் றோன்றல்வித்தி யானந்தம்
மன்னுவிடை யஞ்சுழுத்தி வாசனையும்—பின்னுதா
பினமொடு போகமிச்சை தேருணர்ச்சி வாக்கெட்டும்
ஆனந்தோ பாதிவிடுத் தாய். (௬௧)

அந்தமிலா நித்தியத்துக் கான வுபாதிகேள்
எந்தெந்த நாளு மிருப்பதனிற்—சந்தகமும்
ஓது மபாவ மொருநான்கு நீங்குவந்த
வாதை யுபாதி மதி. (௬௨)

நாலபா வத்தினையு நல்லசிவ நீங்கியெக்
காலு மிருப்பதெந்தக் காரணத்தாற்—சீலக்
குருநாதா நின்றன் குரைகழலை வாழ்த்திப்
பெருமகிழ்ச்சி கொள்வேற்குப் பேசு. (௬௩)

முன்னோ ரநாதிசிவ முன்பிரகா பாவமுறுப்
பின்னழித்த லில்லைப் பிரத்தொமிசந்—துன்ன லுறு
தங்கிங்கும் பூரணத்தா லன்னியொன்யா பாவமுறு
தெங்குமென்று முள்ளதினு லெண். (௬௪)

என்று மபாவமுறா தென்னுமறை யாதலினால்
ஒன்று மபாவ வுபாதியிடுத் — தென்றுமது
நித்தமெனக் கொள்ளுநிமுன் னோரதினா ரிப்படியே
சித்தமதிற் கொண்டார்க டேர். (௩௫)

உற்றபரி பூரணத்துக் குண்டா முபாதிகள்
மற்றபரிச் சேதமாய் மன்னுவதி — னற்றவனே
மூன்றுபரிச் சேதங்கண் முட்டாது நீங்குவதே
சான்றோ ருபாதியென்பர் தான், (௩௬)

சான்றோர்கள் போற்றுகின்ற சற்குருவே சொல்லுகின்ற
மூன்றுபரிச் சேதமெவை மூவிதமாய்த் — தோன்றவைப்
பூரணந்தா னீங்கியெங்கும் பூர்த்தியுறுந் தன்மைதன்னை
யோருதற்குச் சொல்வா யுவந்து. (௩௭)

இத்தேயத் துள்ளதென லத்தேயத் தில்லதெனல்
சித்தங்கொ டேயபரிச் சேதமென — வித்தரையிற்
சாலவிப்போ துள்ளதெனல் சாலவப்போ தில்லதெனல்
காலபரிச் சேதமெனக் காண். (௩௮)

ஈதாகா வீதாகு மென்பதனைத் தான்சொல்லுந்
தீதாகும் வத்துபரிச் சேதமெனத் — தீதேதும்
ஒன்றாத நற்சிவத்தி லோதுபரிச் சேதமறா
நன்றாகும் பூரணத்தா னாடு. (௩௯)

எந்தெந்தத் தேயத்து மெந்தெந்தக் காலத்தும்
எந்தெந்த வத்துவிலு மெங்குநிறைந்—தந்தமின்றிச்
சத்தா யிருத்தலினாற் சாற்றுசிவம் பூரணமே
ஒத்தபரிச் சேதம்விடுத் துன். (எ௰)

சத்துச்சித் தானந்தஞ் சார்நித்த பூரணத்தை
சித்தந் தனித்தனியே சிந்தித்தா—லொத்தென்றும்
ஏக சிவமாகி யின்புறுவ தெப்படியோ
சோகமறச் சொல்வீர் துணிந்து. (எக)

வெண்மை யொளிகுளிரான் மென்மதியு மூன்றாகா
செம்மையொளி வெப்பத்தாற் செங்கதிரு—மும்மையல
அப்படிப்போற் சச்சிதா னந்தநித்த பூரணமெண்
எப்பொழுது மேகசிவ மே. (எஉ)

ஏகசிவந் தன்னிடத்தே யிவ்வுலக வாரோபம்
ஆகுதற்குக் காரணமென் றங்கவற்றை—யூகமுடன்
மெல்ல வுரைத்தருள்வாய் மேதினியி லுய்வதற்கு
நல்லகுரு நாதா நயந்து. (எ௩)

சுத்த சிவந்தன்னிற் றுன்னபிணை பின்னையெனுஞ்
சத்தி யிரண்டுண்டு தானதனி—லொத்தபிணைப்
பேதமின்றித் தானிருக்கும் பின்னையுல காய்த்தோற்றும்
ஓதுசுத்தி வெள்ளிபோ லுற்று. (எச)

சுத்திவெள்ளி போற்சிவத்திற் றன்னியுல காய்விரிந்த
சத்தி யிலக்கணத்தைச் சாற்றென்று—னுத்தரங்கேள்
மித்தை சடந்துக்க மேவனித்தங் கண்டமதாஞ்
சித்தமதி தன்னிற் றெளி. (௭௫)

ஐயனே மித்தைமுத லங்கதனிற் காட்டென்றாற்
பொய்முயற்கோ டாதிசடம் புன்முதலா—மையபுத்தி
மூடகோ ரந்துக்க மோதனித்தந் தேகாதி
நாடுகண்டங் காலமுத லாம். (௭௬)

சத்திசிவம் விட்டுச் சகத்தன்றித் தோற்றாதோ
வித்தைசத்தி வித்தனுக்கு வேறின்றி—யொத்துருவாய்த்[து
தோற்றல்போற் பொய்ச்சகமாய்த் தோற்றுமன்றித் தோற்று-
சாற்றுசிவம் விட்டில்லைத் தான. (௭௭)

தோற்றுலகா யச்சத்தி தோன்றுதற்குக் காரணமென்
போற்றுகின்ற மாயைக்குப் பொன்னருளாற்—சாற்றென்றாற்
பின்னையெனு மூலப் பிரகிருதி முக்குணத்தால்
மன்னுலக சிவபர மாம். (௭௮)

மூலப் பிரகிருதி முக்குணத்தைச் சார்ந்திருத்தால்
மாலொழியத் தானுரைப்பாய் மாதவனே—மேலுணர்வாய்
சச்சிதா னந்தசிவ சன்னிதியைச் சார்ந்ததனாற்
றுச்சமா முக்குணந்தோன் றும். (௭௯)

முக்குணங்க ளுமை முருப்பேத தோற்றங்கள்
அக்குணங்க டம்மாலிங் காவதெலா—மிக்கணமே
போதித் தருள்புரிகின் பொன்னடியைத் தஞ்சமுற்றேன்
நாதனே யுய்வதற்கு நான். (அ௰)

சுத்தமிகும் வெண்மையொடு துன்னுசெம்மை நீலமுருச்
சத்துவமி ராசதந் தாமதம்பேர்—சுத்தமொடு
மூட மசுத்தமெனை முப்பேத முக்குணமுங்
கூடுவதான் மும்மாயை கொள். (அக)

சத்துவத்தை மாயையென்று சாற்றுமறை ராசதத்தை
பெத்தவித்தை யாமென்று பேசியிடு—மொத்துகின்ற
தாமதத்தை யெந்நாளுஞ் சாற்றும் பிரகிருதி
யாமென் றுணைக்கு மறி. (அஉ)

மாயைதனில் வான்போல மன்னுகின்ற நற்சிவத்தின்
தூப பிரதிவிம்பந் தோற்றுமதே—யாயுங்கால்
ஈசன் பதியாகு மென்று மறைப்பில்லாப்
பேசந்தர் யாமியெனப் பேண். (அ௩)

ஈசனுக் கிம்மாயை யேகா ரணதேகம்
மாசுழுத்தி யானந்த மாகோசம்—பேசுமிந்த
மின்மாயை முக்குணத்தின் மேவியென்று மவ்விசன்
றன்னிமித்தன் முத்தொழிற்கு நாடு. (அச)

சத்துவத்தில் விட்டுறுவாய்த் தாயெல்லாங் காத்திடுவன்
ஒத்துகின்றி ராசதத்தி லொண்சிருட்டி—நித்தமுமே
யாக்கும் பிரமனு யண்டமெலாந் தாமதத்திற்
போக்கு முருத்திரனாய்ப் போந்து. (அ௫)

பேசு மவித்தைப் பிரிவா லனேகமதிற்
றேகசிவத் தொண்சாயை சேருமதே—மாசுற்ற
சீவர் சிதாபாசர் தேர்பசுக்கள் கிஞ்சிஞ்ஞர்
மேவும் பிராஞ்ஞரென வெண். (அ௬)

செப்பவித்தை மாயையினிற் சிற்சிவந்தான் றோற்றுவதிங்
கெப்படிப்போ லென்றக்கா லிப்புவியி—லப்பினது
சுத்த மலினத்திற் சூரியன் றோற்றல்போல்
நித்தசிவந் தோற்றுமுணர் நீ. (அ௭)

ஆனந்த கோச மவித்தைபதே சிவருக்கிங்
கீன சுழுத்தி யெனுமவத்தை—ஞானமுறுக்
காரண தேகமுமாங் காணவித்தை முக்குணத்திற்
சாருவரச் சிவரென்றுந் தான். (அஅ)

சத்துவத்திற் சார்சிவன் றத்துவந்தேர் ஞானமிட்டன்
சித்தமுறு ராசதத்திற் சேர்சிவன்—மெத்தவுமே
காமக் குரோதமொடு கர்மமிட்ட னாயிடுவன்
தாமதத்தைச் சார்சிவன் மூன். (அகூ)

சோம்பன் மயக்கந் துயிலுற் றழுங்கிடுவன்
ஆம்பகுதி முக்குணத்தி லாமிரண்டா—லோம்புகின்ற
காரணமாந் தோற்றமிவை காண்சூக்க தோற்றம்பின்
தேர்ந்துறச் சொல்வேன் றெளி. (௯௰)

சாற்று முயிர்க டனுகரண போகமுறப்
போற்றுகின்ற நல்லீசன் பொன்னோக்காற்—றோற்றுகின்ற
தாமதபா சப்பகுதி தானே பரிணமித்துப்
பூமியுண்ணீர் வித்தெனப்பெரும் மும். (௯௧)

அப்பமக தத்துவ மாகாம மவ்வவத்தை
யொப்பு நிருவிகற்ப மோருங்காற்—செப்புமத்தி
யாமதுவே பின்விகற்ப மாமுளைபோ லாங்காரம்
ஆமதனின் மூன்றுகுண மாம். (௯௨)

துன்ப வகங்கரத்திற் றோன்றுசத்து வாதியுருப்
பின்புபிர காசம் பிரவிருத்தி—புன்மோகங்
தக்கபேர் வைகாரி தைசதம்பின் பூதாதி
அக்குணங்கட் காமென் றறி. (௯௩)

தோற்றுமகங் காரத்திற் றாய்விண்ணும் விண்ணதனிற்
காற்றுமதிற் றீயுமதிற் காணப்புஞ்—சாற்றதிற்பூந்
தன்மாத் திரைசூக்கந் தானபஞ்சி கிர்தமெனுந்
துன்னுபஞ்ச பூதமுண்டாஞ் சூழ். (௯௪)

தாமதம்பின் னாவரண சத்தியொடு விட்சேபம்
ஆமதனில் வான்வளியு மக்கினியும்—பூமியப்புந்
தோற்றுமதாற் சூக்கமொடு தூலசகத் தாமென்று
சாற்றுவது முண்டறிநீ தான். (௯௫)

மூன்றுமகங் காரத்தின் முக்குணமும் பின்னுதித்த
ஐந்துபூ தங்களுக்கு மாமதிலே—முந்திரண்டாற்
சூக்க தனுவாகுந் தூலசகந் தாமதத்தால்
ஆக்கும் பரன்றா னறி. (௯௬)

ஓதுபஞ்ச பூதத் தொளிர்சாத் திகவமிசஞ்
சோதியொன்று முட்கரணஞ் சொல்லைந்தும்—காதுமுதல்
ஞானேந் திரியமைந்து நன்ஞான சாதனம்பத்
தீனமறு சத்துவத்தா லெண். (௯௭)

நாடுபஞ்ச பூதத் திராசதமாங் கூறொன்றாய்க்
கூடுவது மென்பிராணன் கூட்டமைந்தும்—கூடலிலாக்
கன்மேந் திரியமைந்துங் காண்கிரியா சாதனம்பத்
தென்னுமிது ராசதத்தா லெண். (௯௮)

சொன்ன விருபதுவுஞ் சூக்க வுடலாகும்
அன்னதனை நல்லீச னான்மாக்க—டுன்னிடவுஞ்
செய்தளித்த னேனென்றாற் சீவர்க்குத் தந்ததுகேள்
மெய்க்கிரியை ஞானமுற வெண். (௯௯)

ஒத்துநிற்கு முட்கரணத் தொன்விருத்தி ஞானமனம்
புத்திசித்த மாங்காரம் பூதமுறை—யைந்தவிபேர்
நேரொன்றைத் தானினைத னிச்சயித்தல் சிந்தித்தல்
சேருமபி மானஞ் செயல். (௱)

இந்து பிரமனரி யெண்ணு முருத்திரனும்
அந்தக் கரணத் ததிதெய்வம்—முந்துச்சி
கண்ட மிருதயங் காணுபி சர்வாங்கம்
மண்டவையின் றான மதி. (௱௧)

வேறுமென் காதுடம்பு மென்சட்சு சிங்குவையுங்
கூறுக் கிரணமைந்துங் கூடுதொழின்—மாறுமற்
கேட்டலுறல் காண்டல் கிடைப்பதுண்ணன் மோத்தலாம்
மீட்டவையின் றெய்வங்கேண் மேல். (௱௨)

திக்குடன் மாருதந் தேர்பானு மென்வருணன்
தக்க வசுவினியுஞ் சார்தெய்வ—மெக்காலுங்
காதுடலம் வாய்மூக்குக் கண்ணைந்துந் தானவைக்கே
யோதுமிடங் கண்டங் குணர். (௱௩)

ஞானமுறு மிந்திரிய நண்ணுபுறம் போலுள்ளும்
பீனசெவி மூடப் பிராணனொலி—தான்கேட்கும்
அன்னத் தழுந்திச மாயுமுடல் கண்மூடின்
உன்னுள் ளிருள்காணு மோர். (௱௪)

வாந்திபுட னேப்பத்தின் மன்னுசுவை கந்தத்தைத்
தோய்ந்தறிபு நாமூக்குச் சொல்லுங்கன்—மேந்திரியம்
வாக்குப்பா தமபாணி மன்னுகுதங் குய்யத்தால்
ஆக்குந் தொழில்கேட் டறி. (௩௫)

வார்த்தை நடத்தல் வழங்கல்விட லின்பமாம்
ஏத்துமங்கி சூரிய னிந்திரன்பின்—கூற்றுவனுந்
தக்கபிர சாபதியுஞ் சாற்றிவையின் றெய்வமிவை
புக்குமிடம் வாய்முனெப்போ தும். (௩௬)

நெஞ்சிற் பிராண னிசுவொடுசு வாசமுறும்
மிஞ்சபா னன்குதத்தை மேவியே—யெஞ்சுமலந்
தள்ளுமுதா னன்கண்டந் தங்கியன முட்டள்ளுந்
தெள்ளுச மானனுந்தி சேர்ந்து. (௩௭)

அன்னரச நாடிதொறு மாகுதற்குத் தான்பகுப்பன்
உன்னுவியா னன்னுடல முற்றிருந்து—பின்சுமப்பன்
நாகன்சோம் பாவித்த னன்றளிப்பன் கூர்மனால்
ஆகும்விக்க லேப்பமுத லாம். (௩௮)

தும்ம லிருமலுறுஞ் சொல்லுங் கிரிகரனால்
செம்மைநகைப் பேச்சாக்குந் தேவதத்த—னிம்மையினிற்
சோகமொடு ராகமுறத் துன்னுந் தனஞ்சயன்றான்
தேகம்பின் வீங்குவிப்பன் றேர் (௩௯)

பேசுபிரா ணாதிக்குப் பேண்விசிட்டன் விஸ்வகர்த்தா
ஆசில்விஸ்வ யோனி யசன் சயனும்—மாசிலதி
தேவனக வாயுவைந்துஞ் செப்புபுற வாயுவைந்தும்
மேவும்பத் தாமிவைக்கு மேல். (௱௰)

அந்தக் கரணமதை யாட்டுவது மாப்பிராணன்
அந்தரி யாமியின் னாமுக்கிய—னுந்துபிர
பஞ்சன் வயி ரம்பனெனப் பன்னைந்து வாயுவதி
நெஞ்சதனிற் சிவனொடு நின்று (௱௰௧)

ஞானமுறு மிந்தியத்தை நண்ணும் பிராணாதி
தானசைக்குங் கன்மேந்தியந் தன்னையுமே—யானபுற
நாகாதி வாய்வசைக்கு நண்ணுந் தொழிலிடமும்
நீகாண்பாய் சொன்னே னிசம். (௱௰௨)

மன்னுஞ் சகமதனில் வாழுமுயி ரத்தனைக்குந்
துன்னுமிந்தச் சூக்கவுடற் சொல்லுமொன்றை—யுன்மானி
பன்னுறுந் தைசதனிப் பாங்குபெறு சூக்கவுடல்
உன்னுமுக் கோசகனா வோர். (௱௰௩)

வாக்காதி யிற்பிராணன் மன்னல் பிராணமயந்
தாக்குஞா னேந்தியத்திற் சார்மனமே—நோக்குமனோ
கோசம்ஞா னேந்தியத்திற் கூடுபுத்தி விஞ்ஞான
கோசமெனக் கொள்வாய் குறித்து. (௱௰௪)

சூக்கவுட லெல்லாமுஞ் சொல்லீசன் சூக்கவுடல்
சூக்கவுட லெல்லாமுந் துன்னியே—நோக்கீசன்
பொன்கொர்ப்ப னுமம் புகலப் பெறுவனவன்
மன்சூக்க தேகமிது வாம். (௱௰௫)

சூக்கசகத் தோற்றமிவை தூலசகத் தோற்றங்கேள்
சூக்கவுட னின்றிடற்குத் தூயபர—னுக்கினுன்
மிஞ்சுபஞ்ச பூதத்தின் மென்றுமதக் கூற்றைப்
பஞ்சிகரித் தண்டமுதல் பார். (௱௰௬)

பன்னுமைந்து பூதத்தைப் பத்தாக்கிப் பாதியினை
நந்நான்காச் செய்துமற்ற நால்சேர்க்கத்—தன்னையன்றி
ஒண்டூல பூதமா மோதுமதிற் றூலதனும்
அண்டபுவ னம்போக மாம். (௱௰௭)

மண்ணுதிக் கானதொழின் மாபொறுமை யுண்டைப்ணல்
ஒண்பாகங் காய்தலிட மோர்தருமங்—திண்ணெகிழ்வு
வெப்பம் பரிசம்வெளி மேவுமயன் மாலரனுஞ்
செப்பீச னென்சிவனுந் தேவு. (௱௰௮)

சத்தமுத லைங்குணத்திற் சத்தமொன்றும் விண்ணினுறும்
சத்தபரி சம்மிரண்டுஞ் சார்வளியின்—மத்தியமாம்
அக்கினியின் மூன்றொளியும் மப்புவினி னல்ரசமும்
ஒக்குமண்ணிற் கந்தமுமைந் தோர். (௱௰௯)

தூலதனு வேருங்காற் றோலுதிர மாமிசத்தோ
டேலுநரம் பத்திமச்சை யிவ்வாறுந்—தூலமொன்றை
மன்மானி யொன்விசுவன் வாழவத்தை சாக்கிரமீ
தன்னமய கோச மறி. (௱௨௰)

அன்னையப்ப னுண்கின்ற வன்னத்தின் வீரியத்தால்
அன்னைசு ரோணிதத்தி லப்பனது—மென்றுது
சார்ந்தாறு தத்துவமாய்த் தங்குமதிற் சூக்கவுடற்
சேர்ந்து பிறப்பதெனத் தேர். (௱௨௧)

மலையேழுந் தீவேழு மாகடல்க ளேழும்
உலகுபதி னாலோ டுருவு—மலையொன்றும்
ஓடு மிருசுடரு மோரண்டமா மிவைதான்
நாடுசிவத் தேபொய்யா நம்பு. (௱௨௨)

மூவரொடு சித்தர் முனிவர்கற் கந்தருவர்
தேவ ரொடுமனிதர் சிரறினர்—மாவசுரர்
பாபப் புலியாதி பாம்பெறும்பு வாழ்பதியே
மாபுவன பேத மதி. (௱௨௩)

சத்த பரிசமொடு சாருகின்ற ரூபரசஞ்
சித்தமகிழ் கந்தமைந்தாஞ் சீர்விடைய—மெத்தவுமே
ஆன்மாக்க ளுண்போக மாகவிவை செய்தளித்தான்
நான்மறையும் போற்றீச னன்கு. (௱௨௪)

எல்லாமாந் தூலவுட லீசனுக்குத் தூலவுடல்
எல்லாமாந் தூலத்தை யின்புற்றுப்—புல்லீசன்
சொல்லும் விராட்டென்னுந் தூய்நாமம் பெற்றிடுவன்
நல்லீசன் றூலமிவை நாடு. (௱உ௫)

தூலசகத் தோற்றமிவை சொல்லினே னிச்சகத்தில்
மாலுற் றவித்தை மறைப்பினுற்—றூலாதி
மூன்றுடலை நானென்று முன்னுவதா னின்றனக்குத்
தோன்றும் பிறப்பாதி துன்பு. (௱உ௬)

தூலமுதன் மூவுடலாற் றுன்பமென்று லவ்வுடலில்
மால்செய் யவித்தையினை மாற்றியருள்—தூலமுதன்
மூன்றி னிலக்கணத்தை முற்றுமுணர் மால்வடிவாய்த்
தோன்றவித்தை யோடகலுந் துன்பு. (௱உ௭)

சித்தமகிழ் தேசிகனே தேக விலக்கணத்தை
உய்த்துணர யானறியே னுதென்றுன்—முத்தேக
பஞ்சகோ சங்களும்பொய் பன்னுசடந் துன்பனித்தம்
மிஞ்சுகண்ட மோர்சொல்வேன் மேல். (௱உ௮)

தூலமொடு சூக்கதனு தோன்றுபஞ்ச பூதவகம்
மூலப் பகுதியொடு முக்குணமு—மேலுகித்த
வாறே யபவாத மாயொடுக்கு மெய்ச்சிவத்தே
கூறுகட மண்ணேபோற் கொண்டு. (௱உ௯)

பொய்யாகு மெல்லாமும் போநசிவ மொன்றேதான்
மெய்யாகு மப்பொருளே மேவிடுவா—யுய்யுகிலே
நன்றுனக்குச் சொல்லினே னம்பியதை யடைந்தால்
இன்றே சுகமுண்டா மிங்கு. (௱௩௰)

அன்னமய தேகத்தால் யாவுமுணர்ந் துண்கின்றோம்
அன்னமய தேகமன்றி யாவையுமே—பின்னுணரோம்
அன்னமய தேக மசத்தாதி யாகுமெனல்
என்னவிதஞ் சொல்வா யெனக்கு. (௱௩௧)

பஞ்சபூ தங்களைப் பார்க்குமறி விற்பொய்யே
துஞ்சுங்கா லோர்சடமே சொல்லுடல—மெஞ்சுகெர்ப்பத்
தோன்றுதலாற் றுக்கமே யோரளித்த நாசமதால்
நன்றுகண்ட நான்முழத்தா னுடு. (௱௩௨)

வாழும் பிராணனுன் மன்னுடலம் வாழ்ந்துணரும்
வாழும் பிராணன்றி மன்னுடலம்—வாழ்வதிலே
வாழும் பிராணன்றான் மற்றசத்துத் தான்முதலாய்ச்
சூழுமென லெப்படியோ சொல். (௱௩௩)

உன்னுகின்ற ராசதமா யோருமறி விற்பொய்யே
துன்னுஞ் சுழுத்திகின்றுஞ் சொல்சடமே—பின்பிராணன்
தாகமுத லாற்றுக்கந் தானனித்த நீங்குதலால்
தேகத்துக் குட்கண்டந் தேர். (௱௩௪)

காணுநின்ற ராசதமாக் காணுமறி விற்பொய்யே
பேணுகன்ம விந்தியமும் பின்சடமே—பூணுதொழில்
வாக்காதி யாற்றுக்கும் வார்த்தைமுத லோய்வனித்தக்
தாக்குகண்டம் வெவ்வேறாற் றான். (௱௩௫)

ஞானமுறு மிந்தியங்க ணண்ணுகன்ம விந்தியத்துக்
கானதொழிற் காட்டி யறிவுருவாய்த்—தானின்று
காண்டலொடு கேட்டல் காரியங்கள் செய்யுமதை
ஈண்டசத் தாதியென்ப தேது. (௱௩௬)

ஓதுகின்ற சத்துவமா யுன்னுமறி விற்பொய்யே
காதறிவைக் கண்ணுணராக் காண்சடமே—தீதுபொருள்
தேடுதலாற் றுக்கஞ் செவிடாதி யாலனித்தங்
கூடுகண்டம் வெவ்வேறாய்க் கொண்டு. (௱௩௭)

செல்லும் பிராணனைத் தேக்கிவிடுத் தேயுணரும்
நல்லமனந் தானறிவாய் நண்ணியே—யெல்லாமும்
ஆக்குமது தானு மசத்தாதி யாமோதான்
ஊக்கமுற நாயேற் குரை. (௱௩௮)

சத்துவமா யோரறிவிற் சாருமனந் தானசத்தே
புத்தியொன்றிற் செல்லிற் புகல்சடமே—சத்தமுதற்
சொல்விடைய விச்சையினாற் றுக்கமினை வோய்வனித்தம்
புல்லுகண்டம் வாயுவுக்குட் பூந்து. (௱௩௯)

நித்தஞ் சவிமனத்தை நோக்கத் தானிறுத்தி
சித்த மயக்கமதைத் தீர்த்துணரும்—புத்திதான்
மன்னுகர்த்தா வாகியாய் வாழுமதை யெப்படித்தான்
உன்னுமசத் தாதியென்ப தோது. (௱௪௰)

இன்பமுறுஞ் சத்துவமா யெண்ணுமறி விற்பொய்யே
அன்பில் விடையமதை யாய்ந்துணராப்—புன்சடமே
மானமதாற் றுக்கமுறு மாறெண்ணத் தாலனித்தம்
ஈனமனத் துட்கண்ட மெண். (௱௪௧)

ஆனந்த கோச வவித்தை யுறுஞ்சிவன்
சூனியத் தோடின்பமதைத் தோய்ந்தறிவன்—மேனவிலும்
புத்திதனை யாட்டிப் புருடனாய் வாழுமவன்
எத்தா லசத்தாதி யிங்கு. (௱௪௨)

சிவ னவித்தையெனத் தேரறிவிற் றானசத்தன்
ஆவலினாற் பொய்விடைய மாய்ந்துணரான்—மேவுசடன்
நானென்று துன்புறுவன் ஞானதையத் தாலனித்தன்
ஊனகண்டன் புத்திக்குள் ளூற்று. (௱௪௩)

பேசு சுககோசப் பேரவித்தை யேயென்றும்
மாசுமுத்தி காரணத்தில் வாசனைக—ளேசுருக்கி
வைத்துப்பல் சிவர்களும் வாதையுறப் பின்விரிக்கும்
அத்தையசத் தாதியென்ப தார். (௱௪௪)

மூலப் பகுதியென முன்னுமறி விற்பொய்யே
மேலொன்றுந் தானுணரா மென்சடமே—மால்வடிவாய்த்
தான்மயங்கித் துக்கமுறுஞ் சார்விருத்தி யாலனித்தம்
ஆன்மாவிற் குட்கண்ட மாம். (௱சரு)

எல்லாமா மூலவுடலு மிவ்வண்ணம் பொய்தானே
நல்லா வுணர்ந்திடுதி நன்றுரைப்பேன்—றொல்லுலகில்
ஓர்கடத்தை மண்ணென் றுணர்ந்தோர்க் கெலாமண்போற்
காரியங்கள் யாவும்பொய் காண். (௱சசு)

என்னுலு யோனிகளா லேழுவகைத் தோற்றத்தைப்
பண்ணுதற்குக் காரணமாய்ப் பன்னூலு—நண்ணுகின்ற
பூதங்க ளைந்துந்தான் பொய்யாதி யாகுமோ
போதமுற நன்றாப் புகல். (௱சஎ)

நண்ணு மகங்கரமா னாடைந்த பூதமும்பொய்
எண்ணுமறி விற்சடம்பா ரிங்கிடருற்—றெண்டுன்பாங்
கற்பத்தின் மாய்த் தனித்தாங் கண்டம்வெவ்வே றாதலினால்
நற்புத்தி தன்னிலிதை நாடு. (௱சஅ)

பன்னு மகங்கரமும் பார்க்கிலசத் தாமோசொல்
உன்னுமக தத்துவமா யோரொடுங்கும்—பின்மகமுந்
தாமதமாப் பாரொடுங்குஞ் சாற்றுகின்ற முக்குணமுஞ்
சாமுன் பகுதியுற்றுத் தான். (௱சகூ)

மூலப் பகுதிதான் முக்குணத்தான் முப்பொருளைச்
சால விரித்தெங்குஞ் சாருமது—மேலதனைப்
பொய்யாதி யாகப் புகலப் படுமோதான்
உய்வதற்குச் சொல்வா யுவந்து, (௱௫௩)

காணாறு மேருங் கயிற்றரவும் போலதுதான்
ஞானசிவ மன்றியிலை நன்றாகத்—தானதித்
தோற்று முபாதியோ னச்சுத்தமுறு மீசனிங்கு
சாற்றுசிவ மேயுண்மை சார். (௱௫௪)

பஞ்சகோ சங்களுநீ பன்னாசத் தாதிபொக்கும்
என்றிசின்ற காணு மியம்பென்றற்—பஞ்சகோ
சங்களுனா மான்மாவே சாரவித்தை தன்மறைப்பான்
மங்குமுயி ராணுப் மதி. (௱௫௫)

வேத முடிவில் விளங்குங் குருபரனே
ஓதான்ம லக்கணத்தை யோர்ந்துய்யப்—பேதையற்கு
நன்று முரைத்தருள்வாய் ஞாலமதி லெந்நாளும்
நின்றாள் பணிவேற்கு நீ. (௱௫௬)

ஆன்மாவே சத்தாகு மான்மாவே சித்தாகும்
ஆன்மாவே யானந்த மாமதிநி—யான்மாவே
நித்தியமும் பூரணமு நேயந்த வான்மாவே
சித்தவிகா ரம்விட்டுத் தேர். (௱௫௭)

போத வடிவான புண்ணியனே நின்னருளால்
ஆதரவாய்க் கேட்கு மடியேற்குப்—போதமுறச்
சத்தாதி லக்கணங்கள் சாற்றுகின்ற வான்மாவிற்
கெத்தாற் பொருந்து மிசை. (௱௫௫)

சார்மூ வவத்தையிலுந் தானிருப்பாற் சத்தான்மாச்
சேர் நால மாதிகளைத் தேரறிவா—லோர்சித்தாம்
பொன்றுதி யின்பொழிப்பாற் பொங்கின் பழிவினித்தம்
உன்பூ ரணமுழுது முற்று. (௱௫௬)

பொன்னும் புதல்வனும் புல்லுடலோ டிந்தியமும்
மன்னுகர ணஞ்சீவன் வாழாறு—முன்னின்ப
மத்துமெனப் பற்றுநீ வந்தவிடை யூறுகளில்
அந்தைவிடு நீயின்ப மாம். (௱௫௭)

சொல்லுதுன்ப மங்கினியுஞ் சூழ்காற்று மாக்கினையும் [ம்
நல்லகிட்டை யாலமவின்ப நண்ணுங்காற்—புல்லும்பொன்னு
இட்டமகன் றேகேந்திய மெண்ணுமனஞ் சீவனையும்
விட்டநீ யின்பான்மா வெண். (௱௫௮)

முன்கன்மத் தாற்சென்ம முண்டெனலான் முன்னுமுண்டு
மன்னாக சொற்கமுற்று வாழுமென்றாற்—பின்னுமுண்டிங்
கிவ்வகையா னித்தியமே யிவ்வான்மாப் பூரணந்தான்
எவ்வுயிரு நானெனலா லெண். (௱௫௯)

ஆரியனே யின்புருவா மான்மகிலே தன்னைச்
சேருகிற தெப்படிநீ செப்பிடுவாய்—பாருலகில்
உன்னடியை நாளு முவந்து பணிகின்ற
என்கவலை நீங்குவதற் கின்று. (௱௬௰)

துச்சமா மிப்பஞ்ச கோசத் துடக்ககன்றால்
சச்சிதா னந்தசிவந் தானீயே—நச்சுகின்ற
தேகவபி மானம்விட்டுச் சின்மயமா மான்மாவை
யோகவனு பூதிகொண் டுன். (௱௬௧)

ஞான சிவமாக நவில்சுருதி யாதென்னை
ஊனமிலா நால்வேதந் துத்தமமாய்த்—தானிற்குஞ்
சாம மறைமுடிவாந் தத்தொமசி வாக்கியந்தான்
நேமமுடன் சொல்லு மிசம். (௱௬௨)

தத்தொ மசிவாக்குத் தற்பதமுந் தொம்பதமும்
ஒத்த வசிபதமு மோர்மூன்றாந்—தத்தொம்மென
மன்னு மிருபதத்தில் வாச்யமொடு லச்யமென
உன்னு மிருபொருளுண் டோர். (௱௬௩)

எண்ணு மிருபதத்தி லேய்ந்திருக்கு மப்பொருளைக்
கண்ணினாற் கண்டுணரக் காட்டிடுவாய்—வண்ணமுறுஞ்
செய்பதும நற்பதத்தைச் சிந்தித்து நாடோறும்
நம்பித் தொழுவேற்கு நன்று. (௱௬௪)

வாசகத்தாற் றோற்றுபொருள் வாச்சியம்பின் லட்சியந்தான்
வாசகத்தின் வாச்யமொடு மன்பொருளாம்—போதகத்தொம்
வாசகத்தின் வாச்சியமாய் மன்னீச சிவனொடு
வாசசிவ மான்மலக்ய மத்து. (௩௬௫)

தத்தெனது நல்லீசன் சாற்றுந்தொம் நீசீவன்
ஒத்தவது நீயென் றுரைக்குமசி—தத்தொமெனச்
செப்புபத வாச்சியங்க ளேடறுங்காற் பேதமதால்
எப்போது மைக்கமுறா தென். (௩௬௬)

பன்னீச சீவன் பரோட்சமப ரோட்சம்பின்
துன்று முபாதியுடற் சொன்னமை—முன்னறிவு
எல்லாமும் பேதமதா லேகத்துவ மாகார்கள்
சொல்வாச்ய பேதம்விடுத் துய். (௩௬௭)

சிவனுநந் தொம்பதத்துந் தேசிசன் றற்பதத்தும்
மாவறிவாய் நிற்கின்ற மன்னுன்மா—மேவுசிவம்
எப்போது மொன்றாகு மெங்குநிறை லட்சியத்தைத்
தப்பா திலக்கணையாற் சார். (௩௬௮)

பெத்தமுறுஞ் சீவேச பேதம்விட்டு லட்சியமுற
எத்தனைசொல் லக்கணைக ளென்றனக்குப்—புத்திகொள்ளு
விட்டுணரும் லக்கணையும் விட்டிடாலக்கணையும்
விட்டுவிடா லக்கணையுமென்று. (௩௬௯)

மூன்றுகு மென்னுன் மொழிபொருடான் பேதமுற்றுத்
தோன்றுங்கா லிம்மூன்றாற் சூழ்ந்தறிவர்—சான்றோர்கள்
அங்கதனுள் விட்டுவிடா தாயு மிலக்கணமற்
றிங்கொன்றே யாகு மிதற்கு. (௱௭௰)

தூய்நதியிற் சேரியென்னுந் துய்யவெள்ளை போகுதென்னும்
ஆய்ஸோயந் தேவதத்த னென்னும்—வாய்ச்சொற்கள்
மூன்று முதாரணமா மூவிதமா லக்கணைக்குத்
தோன்றுபொருட் பேதமுணர்ந் துய். (௱௭௧)

ஒருங்காற் சோயமென வோதுபத மானதிலே
தூரமோ டித்தேசஞ் சொல்காலம்—நேரவனை
மன்னிவனு மென்பேத வாச்சியம்விட்டு லட்சியத்தை
உன்னுங்காற் றேவதத்த னென்று. (௱௭௨)

நண்ணிதுபோல் விட்டுவிடா லக்கணையா லட்சியமாந்
தன்சிவத்தோ டான்மாவைத் தேரியே—யெண்ணாதீ
யாதலினாற் பேதம்விடுத் தச்சிவமே நானென்று
போதவிழி கொண்டைக்கம் பூண். (௱௭௩)

என்னு மசிபதத்துக் கேய்ந்தபொரு ளைக்கமதால்
ஒன்றுமது நீயென் றுரைப்பதுவே—திண்மையதால்
நானச் சிவமென்று மச்சிவமே நானென்றும்
ஞானவிழி யாலைக்க நாடு. (௱௭௪)

இந்தவுப தேசமே யித்துன்ப நீக்கும்பின்
எந்தவுப தேசமு மெண்ணுங்காற்—சிந்தையுறுந்
துன்பப் பிறப்பொழிக்காத் தூயசிவத் தைக்கமுற்றால்
இன்பமது நீயாகு மெண். (௱௭௫)

ஓதுபஞ்ச கோசமெலா முற்றுணர்ந்த பக்குவன்றன்
போதவிழி யாற்கண்ட பொய்யைவிட்டுச்—சேதனமெய்
யான்மாவு நற்சிவமு மைக்கியமாம் ஞானநிட்டை
தான்மேவ லுற்றான் றனித்து. (௱௭௬)

சித்த லயமெய்துஞ் சின்முத் திரைபிடித்து
மேத்தநிட்டை கூடுகின்ற மேலோர்க—ளுற்றபல
ஆசனத்துட் பத்மமுட னாகுஞ் சுவத்திகமும்
பேசினல்ல தென்றுணர்ந்தே பின். (௱௭௭)

எண்டுடைக்குட் பாத மிரண்டு மறையவைத்து
கண்மூக்கி னந்தமதைக் காண்கவைத்து—நண்ணுடனோர்
ஆகச் சுவத்திகமா மாசனத்தி னன்றாகத்
தேகபய மாசைவிட்டுச் சேர்ந்து. (௱௭௮)

ஆனந்த மான வகண்ட வனுபவத்தில்
மோன நிலைகொண்டு முக்கரணந்—தானொழிந்து
நின்றோன் வெளிவந்து நேருற்ற வாரியன்றாள்
நன்றாய்த் தொழுதுரைத்தா னாடு. (௱௭௯)

சுத்தசிவ நானேனென் றூயவனே நின்னருளாற்
பெத்தவித்தை யின்றொழிந்தேன் பேரின்ப முத்தியுற்றேன்
போதனையா லின்பளித்த பொன்னருளுக் கீடடியேன்
நாதவுன்றாள் போற்றுகின்றே னன்கு. (௱௮௰)

அன்பன் மொழிகேட்ட வாரியனு முண்மகிழ்ந்து
இன்பசிவந் தானாக வேய்ந்ததுபோ—லுன்புந்தி
தன்னிலே தோன்றுமது சற்குருநூல் வாக்கியத்தால்
இன்னமப ரோட்சமுற வெண். (௱௮௧)

சொன்னபஞ்ச கோசத் தொழிலகன்று சும்மாதான்
தன்னிலையிற் றன்சுகத்திற் றங்கியே—யின்னமென்றும்
இன்புற் றிருப்பதுவே யென்றனக்குக் கைம்மாறு
நின்னறிவா னின்சுகத்தி னில். (௱௮௨)

சொல்லுபஞ்ச கோசத் தொழிலெல்லா நீங்கிப்பின்
அல்ல லொழிந்திங் கறிவுருவைப்—புல்லியே
சும்மா விருப்பதற்குத் தூயவனே நின்பதத்தை
நம்புமெற்குச் சொல்லினமு நன்று. (௱௮௩)

சாதிகுலங் கோத்திரஞ் சட்சமயம் பேருருவம்
ஈதெலாங் கற்பனையென் றெண்ணுடற்கா—மாதர்கரு
ஊறல் பிறந்திறந்த லோங்கல் பருத்திளைத்தல்
ஆறுமன்ன கோசதொழி லாம். (௱௮௪)

நான்பிறந்து நான்வளர்ந்தே னான்பருத்து நானிளைத்தேன்
நான்மரித்து நான்கருவி னண்ணுகின்றே—னானெனுநீ
வேறாகி யென்றேக மென்பதனை யீயாகக்
கூறுன்மா ச்சிவத்தைக் கூடு. (௱அ௫)

தாகம் பசிசோம்ப றங்குவெப்பம் மேல்வலிகள்
வேகம் பெலன்றளர்ச்சி மென்னடைக—ளாகுமிவை
நண்ணுபிரா ணன்றொழிலா நானென்னல் விட்டுநீ
என்றுமான்மா நானென் றிரு. (௱அ௬)

சங்கற்ப மிச்சைபயந் தான்விகற்பஞ் சஞ்சலமும்
இங்குகிளைப் போடுமறப் பெய்வெறுப்பும்-வெங்குரோதம்
எல்லா மனத்தொழிலா மென்றதே யத்தைவிட்டு
நல்லான்மா நானென்றே நாடு. (௱அ௭)

கருத்தத் துவமமதாங் காரமொடு மேதை
உரித்தபொரு ணிச்சயமோ டுத்தி—விருத்திகளில்
மான முறலெல்லா மன்னுபுத்தி தன்றொழினீ
நானொறு தொண்சிவத்தை நாடு. (௱அ௮)

பிரியமொடு மோதம் பிரமோதம் வந்து
தரிசனசா மீபசை யோகால்—வருவதொடு
மன்சுழுத்தி மேவனு மாலறிவோ டெல்லாமும்
உன்னவித்தைச் செய்கைவிடுத் தோன்று. (௱அ௯)

கன்றுமைங் கோசத்தை நானென்று மானியே
என்சிவ னென்றுணர்வா யீதன்று—தன்வடிவாஞ்
சுத்தான்மா நானென்று தோயுற் றவன்சிவமே
சித்தந் தெளிந்ததனைச் சேர். (௱௬௰)

சொன்னபஞ்ச கோசம்போற் சுத்த சிவந் தன்னில்
மன்னுதொழி லொன்றுமிலை மானமிலை—யுன்னிடுவாய்
சுத்த வறிவதனிற் றோயுற் றதுவாகிச்
சித்தமல நீங்கிற் சிவம். (௱௬௧)

சித்தமல மாவதெது செப்பதனின் பேர்கிரியை
யத்தனை நீக்கவென்று லாணவத்தோ—டேற்றகன்மம்
மாயைசுத்த மோடசுத்த மாகும்பேர் மும்மலத்திற்
கேப்கிரியை மேற்பகர்வ னிங்கு. (௱௬௨)

யானெனதென் பானங்கொண் டான்மமறைப் பாணவமிங்
கூனமனம் வாக்குடல்செய் யொண்புண்ணிய—மீனங்கள்
கன்மமல மாமறிவுங் காணுமறி யாமையுமே
மன்னியுறு மாயா மலம். (௱௬௩)

தாரம்பொன் புத்திரனிற் றுவுமூ வேடனையாற்
பாரி லெனதென்று பற்றுவது—நேருடலை
நானென் பதுவுமே நண்ணு ணவமலத்தின்
ஈனத் தொழிலொழிதி யிங்கு. (௱௬௪)

முக்கரணஞ் செய்கன்ம மூவிதப்பேர் தானதையுந்
தக்கவா காமியமுஞ் சஞ்சிதமு—மிக்கபிரா
ரத்தமு மாமென்று நல்லறிஞர் செப்புமப்பேர்
எத்தால் வருமென்றா லிங்கு. (௱௯௫)

நீகாண்பாய் சொல்வே வினைத்துணைத்துச் செய்பொழுது
ஆகா மியமென்ப ரக்கன்ம—மேகூடி
சித்தநிற்றல் சஞ்சிதந்தேர் தேகமுணப் பாகமிட்டு
வைத்தல் பிராரத்த மாம். (௱௯௬)

காணுகின்ற மும்மலத்தின் கட்டழிவ தெப்படிச்சொல்
பூணுகின்ற தேகாதிப் பொய்கண்டா—லாணவம்போம்
தேருசிவம் நானென்னுஞ் சிந்தனையான் மாயையும்போம்
சேருகன்ம நீக்கமேற் றேர். (௱௯௭)

ஞான முதித்தவுட னண்ணுமிச் சென்மமதில்
ஈனவா காமியம்வந் தெய்தாது—போனசன்மச்
சஞ்சிதமு ஞானத் தழலெரித்து நீக்கிவிடும்
புஞ்சபிரா ரத்தமுண்ணப் போம். (௱௯௮)

சாக்கிரத்துஞ் சொற்பனத்துஞ் சார்சுழுத்தி தன்னிலுறும்
ஆக்கைகளிற் றோயு மபிமானம்—போக்கியே
சுத்த வறிவாகித் துரியபதத் தெந்நாளும்
முத்தனாய் வாழ்க முயல். (௱௯௯)

துரியமுறு மான்ம சுகந்தன்னை மேவ
உரியமனத் திச்சைவிடுத் தொன்றிப்—பிரிவற்று
நிற்பா யதனாலே நீயடைவை யான்மசுகம்
அற்பமுந் துக்கமிலை யங்கு. (உா)

உன்னு மனோலயமா மொண்டுரியா தீதநிலை
மன்னச் சுகாதீதம் வாய்க்குங்காண்—பன்னுகின்ற
அந்த நிலைதன்னை யாசிரிய னல்லருளாற்
சந்ததமுஞ் சேர்வாய்நீ தான். (உாக)

சும்மாநீ தானிருப்பாய் சுத்த வறிவுருவாய்
இம்மையிலே துக்கமெலா மேகிவிடு—மம்முத்தி
யாகுமதே பேரின்ப மாரறிஞர் மேவுகின்ற
யோகநிலை கொண்டிங் குவந்து. (உாஉ)

யோக மெனும்பதத்துக் கோதுபொரு ளென்னேசொல்
யோக மனமகலா தொன்றுதலே—மோகமொழித்
தான்மாவாய் நின்றுசிவத் தைக்கமுறல் யோகமென
நான்மறையும் பேசு நயந்து. (உாங)

சித்துருவே யிந்தச் செகத்தெல்லாம் பொன்பணிபோல்
தத்துவத்தை விட்டொன்றுந் தானில்லை—நித்தமுநீ
யப்பொருளோ டொன்று யமர்ந்து சுகமடைவாய்
இப்பிறப்புத் துன்பொழியு மிங்கு. (உாச)

வாக்கு மனமெட்டா மாபிரம வத்தொன்றே
நீக்கமின்றி யெங்கு நிறைந்தபொருள்—சூக்க
அறிவதனாற் கண்டுநீ யப்பொருளை மேவிப்
பிறிவற் றிருப்பதுநற் பேறு. (௨௱௫)

எல்லா முணர்ந்த வெமது குருநாதா
சொல்லுகின்ற வாக்குமனந் தாய்சிவத்தைப்-புல்லியெட்டா
தென்று புகல்வதனை யெப்படிப்பின் றேர்வோர்க்கு
நன்றுணரும் பேசு நவில். (௨௱௬)

வேதமுட லாதிகளை வேறுசெய்து மௌனமதாற்
போதிக்குஞ் சிற்சிவத்தைப் பூரணத்தா—லோதவெட்டாப்
பல்லோரை யல்லவென்ற பத்தினிதன் ஞபகனைப்
புல்லியல்ல வென்றுசொல்லாள் போல். (௨௱௭)

சாருகின்ற தேகாதி தானுணரு நன்மனமும்
ஆரறிவைக் காணும்போ தாங்கிறக்குங்—தேரறிவு
எங்கு நிறைவதனை லெண்ணுமன நின்றுமாராச்
செங்கதிர்முன் மீனொளிபோற் றேய்ந்து. (௨௱௮)

அன்பர்க் கருளுகின்ற வாரியனே நின்னுடைய [ஞ்
பொன்போன்ற நற்பதத்தைப் போற்றுகின்றேன்-றுன்பமுறு
சித்தமுத லான செயல்வாக்குக் கெட்டாத
முத்திவகை நன்று மொழி. (௨௱௯)

வேத மொழியும் விதேகமுத்தி சீவன்முத்திப்
பேத மிரண்டதனைப் பேசுவன்கேள்—மோதுடலைச்
சீவனபி மானமுறச் சேர்பந்த மானம்விடல்
சீவன்முத்தி யென்றே தெளி (உ௱௰)

ஊனவுடன் மூன்றி னொழிவே விதேகமுத்தி
ஞானத்தி யாலவித்தை நாசமுறு—மேனின்ற
காலம் பிராரத்தத் துய்த்தழியு மப்பொழுது
மேலதிவிற் சூக்கலய மெண் (உ௱௰௧)

மேவுங் கடமுடைய வின்னொன்றே யாமதுபோற்
றுவலையிற் றங்குமுடற் போனவுடன்—சீவன்முத்தர்
ஆகிநடு வந்த மகன்ற விதேகமுத்தி
வாதனையின்றிச் சேர்வார் மதி (உ௱௰௨)

இந்தவிரு முத்திதனை யிச்சையெலா மற்றுநின்ற
சிந்தையுளார் சேர்வருண்மை செப்பினேன்—சந்ததமுந்
தேகாதி வாசனையிற் செல்லா தறிவுருவாய்
ஆகாயந் தன்வடிவ மா (உ௱௰௩)

எக்காலு மிச்சைகொண் டிந்தவுட லாதிகளை
எக்காலு மெண்சிவ னேய்ந்துநின்றே—யெக்காலுந்
துன்பளிப்பன் சற்குருவே சொல்சிவ னீங்கியென்றும்
இன்புறநீ நன்ரு யிசை (உ௱௰௪)

மெய்பாக வென்றும் விளங்குஞ் சிவனையன்றி
மெய்யாகப் பார்சிவன் வேருக—வையகத்தில்
இல்லவே யில்லையீ யென்னவனுல் வாடாமே
நல்லசிவ மேயுண்மை நாடு (உாயரு)

சிவனுடன் முன்றிற் சேர்ந்து வினைப்போகம்
ஓவின்றி யெந்நாளு முண்பனென—மேவுமறை
சொல்லுவதென் னையனே துன்பமொழித் தின்பமுறக்
கல்லேனுக் குண்மைதனைக் காட்டு. (உாயசு)

எல்லாஞ் சிவமென்றே யெண்ணுமறி வில்லார்கள்
புல்லுகின்ற போகம் புசிப்பரெனச்—சொல்லுமந்த
வேதமுடி வாயுங்கான் மெய்சிவம் பொய்சிவனென
ஓதுமதை நன்குணர். (உாயஎ)

இன்புருவாஞ் சிற்சிவனு மிச்சையிலன் பூரணத்தால்
இன்புண்ணுஞ் சிவனும்பொய் யென்றக்கா—லின்பான
போகமதை யுண்ணும் புருடனெவ னென்றுணரச்
சோகமொழி சற்குருவே சொல். (உாயஅ)

இன்பதுன்ப முண்சிவனெஞ் சடன் பொய்யானதினுல்
இன்பசிவ னேயுடலி லேய்ந்தென்று—மின்பவிளை
யாடலினுற் போக மனைத்தும் புசிப்பனெனப்
பாடுவது நால்வேதம் பார். (உாயகூ)

அச்சிவனே பல்லுயிரு மச்சிவனே பல்பொருளும்
அச்சிவனே பல்லுலகு மாயினு—னச்சிவனே
எல்லாமுஞ் செய்பவனு மெல்லாம் புசிப்பவனும்
எல்லா மறிபவனு மெண். (உ௱உ௰)

என்னபயன் பெறவோ வெவ்வுயிரு மெப்பொருளும்
மன்னுலகு மாயினான் மாதவனே—யன்னவன்றன்
உண்மை நிலைதன்னை யோதுவா யென்றனக்கு
நண்ணுகின்ற நின்னருளா னன்று. (உ௱உ௧)

ஒழுந்தல் சத்திதனை யுற்றுவினை யாட்டாகப்
பேதமெலாந் தான்மிகவும் பெற்றுநிற்ப—னேதுயிர்போல்
பந்தமுத்தி தானடையான் பன்னவற்றின் சாட்சியனுய்ச்
சந்ததமு மின்பாவன் றான். (உ௱உ௨)

சாலவித்தை செய்கின்றோன் றான்வேறாய் நிற்பதுபோல்
ஞாலமெலாந் தோற்றுவித்த நற்சிவனு—மேலதற்கு
வேறா யிருப்பதன்றி மேவுமதைத் தானடையான்
மாறாவா னந்தன் மதி (உ௱உ௩)

பார்க்கும் விளை யாடலினு லப்பரமன் பொய்யாய்க்கண்
பார்க்கமிகக் காட்டுலகைப் பற்றியே—வாக்கதனல்
என்னென்ன தென்றுமெய்யா யெண்ணியபி மானித்தோர்
பன்னளுந் துன்புறுவர் பார், (உ௱உ௪)

பொய்யாகக் காட்டுலகைப் பொய்யென் றுணராமன்
மெய்யாகச் சிந்திப்போர் மேதினியி—லுய்யாமல்
துன்புற்று வாடுவர்கள் தூயசிவந் தானானோர்
இன்புற் றிருப்பார்க ளென். (உ௱உரு)

காணுங் கொலைகளவு கட்காமம் வஞ்சனைபொய்
ஆணவத்தோ டாங்கோப மத்தனையும்—பூணுமற்
சித்தனையி லெல்லாஞ் சிவன்விளையாட் டென்றறிந்தால்
பந்தமறு முத்தியுறும் பார். (உ௱உசு)

ஆரணத்துக் கெட்டா வகண்டசச்சி தானந்த
பூரணனே நின்றனது பொன்னருளாற்—காரணியிற்
சும்மா விருவென்று சொல்லியெனக் கின்பளித்தாய்
அம்மொழிக்குக் கைமா றியாது. (உ௱உஎ)

பாசமெலாம் போக்கும் பரஞ்சுடரே நின்னுடைய
மாசிலா நற்பதத்தில் வாழ்ந்திருக்க—வாசையெலாம்
நீக்குகின்ற மெய்ஞ்ஞான நிட்டை யெனக்களித்துக்
காக்க வுனக்கே கடன். (உ௱உஅ)

முத்திதருங் கற்பகமே மூவா முழுமுதலே
சித்துருவே யின்பளிக்குந் தேசிகனே—பத்தியினால்
எண்ணிப் பணிகிலா வென்பவமு நீக்கவந்த
புண்ணியனே போற்றிநின்றாட் போது. (உ௱உகூ)

உன்னரிய வீடளித்த வுன்கருணைக் கீடறியேன்
என்னுடல மாவிபொரு ளேற்றருள்செய்—பன்னாளும்
ஆரணங்கள் போற்றுகின்ற வற்புதநற் றேசிகனின்
பூரணத்தாள் வாழிமிகப் போது. (௨௱௯௰

முத்தி விளக்கம்

முற்றிற்று.

ஸ்ரீ சற்குருநாதன் திருவருள் வாழ்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.		திருத்தம்.
௫	௰	சித்தச	...	சித்தஞ்ச
௰	௨	தின்பரு	...	தின்புரு
௰௧	௯	ெ	...	ே
௰௫	௰௧	ஞ	...	ஞ்
௰௬	௰	வரை	...	வற்றை
௰௮	௰௨	ணா	...	ன்
௨௭	௪	ல்	...	ன
௨௯	௰௪			ள
௫௨	௪	க்	...	வேண்டியதில்லை
௪௫	௰௨	யோ	...	யோ
௪௭	௰௯	ன்	...	ன

சிவமயம்.

ஸ்ரீ சற்குருநாதனைக்கியக்கவிகள்

திருநட்சேத்திர முணர்த்தல்

காட்சிக் கரிதாஞ் சிற்சிவ மேனி
கருணையா லெடுத்துவந் துலகிற்
சாட்சி நாதனு மெனும்பெயர் தரித்துத்
தண்ணரு ளேழைக்கம்மைவைத் தெனக்குந்
தீட்சை யொண்சிவஸ்ரீ யெனமொழிந் தைக்கியந்
தெரிவித்துப் பின்னுரு விடுத்தே
மாட்சி கொள்பூரண விதேகத்தைப் பெற்றது
மார்கழிச் சுவாதிநன் னாளே.

இருபருவு புரம்[illegible]பத் துதித்தன்ப ருய்யவருள்
செய்வத[illegible]கொப்பில் சிவமே
செகத்தினிற் புகழ்சாட்சி நாதனென் பேருற்றுச்
செப்பான்ம தத்து வதனைக்
கருதன்ப ருக்கருளிக் குருவூரி லெற்குநற்
கதிதந்து சுவாமி மலையிற்
காண்பரிய பூரண விதேகபத மதுவாய்க்
கலந்ததிரு நாளை யோரில்
தெரிகின்ற கலியுக நாலாயி ரத்தொடு
தொள்ளாயிரத் தெழுப தாறிற்
செல்கின்ற பவவருட மார்கழி மாதத்திற்
றேதிபத் தொன்ப தோடு
மருவமர பக்கம்வரு சுக்கிரவா ரம்மிரா
யிருப தாகு நாழி
மாறிலாத் தசமியொடு சுவாதிநட் சேத்திரமு
மன்னுநற் றினம தாமே.

பூசையின் காலமுணர்த்தல்.

பன்னுநங்குருபரன் பாதம்பூசிக்க
உன்னிடிலென்றுமே யுத்தமமதனிலும்
தன்னிகர்சாட்சிநா தன்றனல்விதேகந்
துன்னியமார்கழிச் சுவாதியுத்தமமே,

பணிசெய்யுங் கிரமமுணர்த்தல்.

மனமுதல்வாக்குடன் மன்னுமுக்கரணமுந்
தினமுமன்பொருமித்துச் சினமொடுபொய்கொலை
களவஞ்சங்களவுகட் காமமும்விடுத்தே
யனகனென்குருபர னரும்பணிபுரியே

வழிபாட்டின் பயனுணர்த்தல்.

குருவழிபாட்டினாற் கொலைமுதற்பாவம்போங்
குருவழிபாட்டினாற் குறையெலாநீங்கிடுங்
குருவழிபாட்டினாற் கூறுநற்குணம்வருங்
குருவழிபாட்டினாற் கோதில்வீடுறுமே.

சற்குருபரன் றிருத்தாளிணை வாழ்கநற்
சற்குருபரன்புகழ் தரணியில் வாழ்கமெய்ச்
சற்குருபரனன்பர் சகலரும் வாழ்கவொண்
சற்குருபரன்றிருத் தண்ணருள் வாழ்கவே.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்